# மன்னார்த் தமிழ்ச் சங்கம்

# அமைப்பு விதிகள்

1. பெயர் : இவ்வமைப்பானது ‘மன்னார்த் தமிழ்ச் சங்கம்’ எனப் பெயர் பெறும். இவ்விதிகளில் இனி ‘சங்கம்’ எனக் குறிப்பிடப்படும்.

2. முகவரி : செயற்குழு / பொதுச்சபை வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி இதனது முகவரி ‘புனித வளனார் மாணவர் இல்லம், வைத்தியசாலை வீதி, மன்னார்’ என்றே அமையும்.

3. முழக்கம் : “சான்றாண்மை இவ்வுலகில் தோன்றத் துளிர்த்த தமிழ்

   மூன்றும் செழித்ததென்று கொட்டு முரசே!” (பாரதி தாசன்)

4. நோக்கமும் குறிக்கோளும் :

   I. மன்னார் மாவட்டத்தில் உள்ள கலைஞர்கள். இலக்கியவாதிகள், அறிஞர்கள். கலை இலக்கிய ஆர்வலர்கள், சுவைஞர்கள் போன்றோரை அமைப்பு ரீதியாக ஒருங்கிணைத்து மாவட்டத்தின் கலை இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்தல், மேம்படுத்தல்.

   II. தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்க் கவின் கலைகள் என்பவற்றின் மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் உழைத்தல்.

   III. இவை தொடர்பான பாரம்பரியப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்தல், பழைய கலை இலக்கிய வடிவங்களுக்குப் புத்துயிர் ஊட்டிப் பாதுகாத்தலும், வளர்த்தலும்.

   IV. இத்தகைய குறிக்கோள்களுடைய ஆர்வலர்களையும், நிறுவனங்களையும் ஊக்குவித்து ஒருங்கிணைத்துச் செயற்பட வைத்தல்.

   V. பூகோள மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து மொழி வளர்ச்சிக்குத் தேவையான, பொருத்தமான புதுப்புதுத் தொழில்நுட்ப உத்திகளையும் கண்டுபிடிப்புக்களையும் உள்வாங்கி நடைமுறைப்படுத்தக்கூடிய பொறிமுறைகளை உருவாக்குதல், ஊக்குவித்தல், அறிமுகம் செய்தல்.

   VI. ஏற்கனவே இத்துறைகளில் ஈடுபாடுள்ளவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி மன்னார் மாவட்டத் தமிழ் மொழி ஆர்வலர்களுக்கு உதவுதல், ஊக்குவித்தல்.

5. குறிக்கோள்களை அடையும் வழிகள் :

   I. தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழர் பண்பாடு தொடர்பான ஆய்வுகள், ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்.

II. அத்தகைய ஆய்வுகளின் பொருத்தமான பெறுபேறுகளை ஏனையோருக்கும் அறிமுகம் செய்தல்.

III. தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழர் கலைகளில் அனைவருக்கும் குறிப்பாக மாணவ சமுதாயத்திற்கு ஈடுபாட்டை ஏற்படுத்தும் வகையில் தேர்வுகள், போட்டிகள், விழாக்கள், விரிவுரைகள், சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், கலை நிகழ்வுகள், மாநாடுகள் போன்றவற்றினை ஒழுங்குசெய்து நடாத்தல், நடாத்த ஊக்குவித்தல்.

IV. நூல்கள் சஞ்சிகைகள், பருவ வெளியீடுகள் போன்றவற்றினை வெளியிடுதல் - வெளியிடுவதற்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் வழங்குதல்.

V. சிறந்த தமிழ் நூல்களைப் பிற மொழிகளிலும் சிறந்த பிறமொழி நூல்களை தமிழிலும் மொழிபெயர்த்து வெளியிடல் - வெளியிடுவதற்கு உதவுதல், ஊக்குவித்தல்.

VI. செயற்குழு / பொதுக்குழுவின் தீர்மானங்களுக்கு அமைவாக சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## 6. உறுப்புரிமை :

மன்னார் மாவட்டத்தைப் பிறப்பிடமாகவோ அன்றி வசிப்பிடமாகவோ கொண்ட, தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட, தமிழ் பேசும் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருமே இன, மத, பால் வேறுபாடின்றி சங்கத்தின் உறுப்புரிமைக்கு விண்ணப்பிக்க முடியும். அத்துடன் மன்னார் மாவட்டப் பாடசாலைகளில் கல்வி பயின்றுகொண்டிருக்கும் பதினாறு வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள் அனைவரும் மாணவர் உறுப்புரிமைக்கு விண்ணப்பிக்க முடியும். ஆயினும் அனைத்து உறுப்புரிமை விண்ணப்பங்களும் அங்குரார்ப்பண ஏற்பாட்டுக்குழு அல்லது செயற்குழு உறுப்பினர்கள் இருவரால் பரிந்துரைக்கப்பட்டிருக்க வேண்டும். மாணவர்கள் மாணவர் உறுப்புரிமைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

I. அங்குரார்ப்பண ஏற்பாட்டுக்குழு என்பது இச்சங்கத்தை உருவாக்கும் பொருட்டு அங்குரார்ப்பண ஏற்பாடுகளில் ஈடுபட்ட கீழ்க்காணும் ஆறு உறுப்பினர்களைக் கொண்டதாகும்.

1. வண. தமிழ் நேசன் அடிகள்
2. ஜனாப் மக்கள் காதர்
3. திரு. வி. எஸ். சிவகரன்
4. திரு. ந. ஜெயபாலசிங்கம்
5. திருமதி பு. மணிசேகரன்
6. திரு. வே. போ. மாணிக்கவாசகர்

## 7. உறுப்புரிமைப் பிரிவுகள்

ஆயுள்கால உறுப்பினர், சாதாரண உறுப்பினர், மாணவ உறுப்பினர் என உறுப்புரிமை மூன்று வகைப்படும்.

## 8. உறுப்புரிமைப் பணம்

ஆயுள்கால உறுப்புரிமை – 1,000/=

சாதாரண உறுப்புரிமை ஆண்டுக்கு - 100/=

மாணவ உறுப்புரிமை ஆண்டுக்கு - 30/=

ஆயுட்கால உறுப்பினர் அல்லாத அனைவரும் ஆண்டுதோறும் தை 30க்கு முன்னதாக தத்தமது உறுப்புரிமைப் பணத்தைச் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தத் தவறியவர்கள் உறுப்புரிமையை இழந்தவர்களாகக் கருதப்படுவர். நிலுவைப்பணத்தை முழுமையாகச் செலுத்தாமல் உறுப்புரிமையைப் புதுப்பிக்க முடியாது. செலுத்தப்பட்ட உறுப்புரிமைப் பணம், நன்கொடை போன்றவற்றில் எவருமே உரிமை கோரமுடியாது.

## 9. உறுப்புரிமை விண்ணப்பத்தை நிராகரித்தல்

தகுந்த காரணங்களின் அடிப்படையில் ஒரு உறுப்புரிமை விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை செயற்குழுவுக்கு உண்டு. இதற்கு எதிராக பொதுச்சபைக்கு மேன்முறையீடு செய்யலாம். மேன்முறையீடு செய்யப்பட்டதற்குப் பின்பு நடைபெறும் முதலாவது பொதுச்சபை அமர்வின்போது இம்முறையீடு பரிசீலனை செய்யப்படவேண்டும். அதனை ஏற்றுக்கொள்ள முடியாதபோது காரணங்காட்டாது அதனை நிராகரிக்கும் உரிமை பொதுச்சபைக்கு உண்டு.

## 10. விதிகளும் ஒழுங்குகளும்

சங்கத்தின் அமைப்பு விதிகள், துணைவிதிகள், காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் போன்ற அனைத்திற்கும் உறுப்பினர்கள் அமைவாக நடக்கவேண்டும்.

### I. உறுப்புரிமையை இடைநிறுத்தல் அல்லது நீக்குதல்

அ. உறுப்பினர் எவராவது விதி 10ற்கு அமைய நடக்காதபோது சங்க நலனுக்கு ஊறு விளைவிப்பதாகவோ அல்லது சங்கத்தின் மதிப்பைக் குறைப்பதாகவோ செயற்குழு தீர்மானிக்குமிடத்து அவரது உறுப்பாண்மையை குறிப்பிட்ட காலத்திற்கு இடைநிறுத்தவோ அல்லது முற்றாக நீக்கவோ செயற்குழு தீர்மானம் எடுக்கலாம்.

ஆ. இத்தகைய தீர்மானம் செயற்குழுவின் 2/3 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படுமுன் குறிப்பிட்ட உறுப்பினர் செயற்குழு முன்னிலையில் தனது நிலைமையை விளக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும். உறுப்பினர் விரும்பினால் செயற்குழுவின் தீர்மானத்திற்கு எதிராக பொதுச்சபைக்கு மேன்முறையீடு செய்ய முடியும். பொதுச்சபையின் தீர்மானமே இறுதியானது.

இ. இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்ட ஒரு உறுப்பினர் சங்கத்திற்கென தான் செலுத்திய உறுப்புரிமைப் பணம் உட்பட வேறு நன்கொடைகள் எதனையும் மீளப்பெற முடியாது.

## 11. வாக்குரிமை

மாணவ உறுப்பினர் தவிர்ந்த ஏனைய உறுப்பினர்கள் அனைவருக்கும் வாக்குரிமை உண்டு. கூட்டத்திற்கு தலைமை தாங்குபவருக்கு ‘முடிவுசெய் வாக்குரிமை’ ஒன்று மட்டுமே உண்டு. வாக்களிப்புக்களின்போது சமமான வாக்குகள் அளிக்கப்படும் சந்தர்ப்பங்களின்போது மட்டுமே அவர் அதனைப் பயன்படுத்த முடியும். தலைமை தாங்குபவர் இதனைப் பயன்படுத்தாது திருவுளச் சீட்டின் மூலமோ, நாணயமெறிதல்

மூலமோகூட முடிவினை மேற்கொள்ளலாம். பதிலி மூலம் எவரும் வாக்களிக்க முடியாது.

## 12. செயற்குழுவும் பதவிக் காலமும் :

சங்கத்தின் செயற்குழுவே நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருக்கும். இது தலைவர், சிரேஸ்ர துணைத் தலைவர், துணைத்தலைவர், பொதுச் செயலாளர், துணைப் பொதுச் செயலாளர், நிர்வாகச் செயலாளர், நிதிச் செயலாளர் ஆகிய ஏழு பதவிவழி உறுப்பினர்களுடன் ஏனைய எட்டு உறுப்பினர்களையும் உள்ளடக்கி மொத்தம் பதினைந்து (15) உறுப்பினர்களைக் கொண்டதாக அமையும். முதலாவது செயற்குழுவின் பதவிக் காலம் தெரிவுசெய்யப்பட்ட ஆண்டின் மிகுதிக் காலப்பகுதியுடன் அதைத்தொடர்ந்துவரும் இரண்டு ஆண்டுகளுமாகும். அதன்பின்பு தெரிவுசெய்யப்படும் செயற்குழு அவை பதவியேற்ற நாள்முதல் தொடர்ந்துவரும் இரு ஆண்டுகள் பதவிக்காலமாகக் கருதப்படும். எனினும் புதிய செயற்குழு தெரிவுசெய்யப்படும்வரை அவர்களே பதவி வகிப்பர்.

செயற்குழுக்கூட்டங்கள் மாதாந்தம் நடத்தப்படவேண்டும். செயற்குழு அமர்வுகளில் நிர்வாக நிதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு செயற்குழுவின் அங்கீகாரம் பெறப்படவேண்டும். செயற்குழுவில் ஏற்படும் வெற்றிடங்கள் செயற்குழுவாலேயே நிறைவுசெய்யப்படும். ஆயினும் அத்தகைய விபரங்கள் பொதுச்சபை உறுப்பினர்களுக்கு எழுத்து மூலம் அறியத்தரப்படவேண்டும்.

செயற்குழுக்கூட்ட நிறைவெண் 9 (ஒன்பது) அல்லது அப்போதுள்ள செயற்குழு உறுப்பினர் தொகையின் அரைப்பங்கிற்கு அடுத்துவரும் ஒற்றை எண்ணாகும். தகுந்த எழுத்து மூலமான காரணங்களின்றி தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்குச் சமூகமளிக்கத் தவறும் செயற்குழு உறுப்பினர்கள் தாமாகவே பதவி விலகியவாராகக் கருதப்பட்டு அவர்களுக்கு எழுத்து மூலாக இதனைத் தெரியப்படுத்த வேண்டும்.

## 13. செயற்குழுத் தெரிவு:

முதலாவது செயற்குழுவானது பொதுச்சபையினாலேயே நேரடியாக முன்மொழிந்து வழிமொழிவதன் மூலம் தெரிவுசெய்யப்படும். அதன்பின்பு பின்வரும் நடைமுறை பின்பற்றப்படும். கார்த்திகை மாதம் 10ம் திகதிக்கு முன்னதாகக் கூட்டப்படும் செயற்குழுக் கூட்டத்தில் மன்னார் மாவட்டத்தில் வசிக்கும் சங்க உறுப்பினர் அல்லாத தகுதிவாய்ந்த அலுவலர் ஒருவரை அவரது எழுத்து மூலமான இசைவுடன் தேர்தல் அதிகாரியாக நியமிக்க வேண்டும். அல்லது புதிய செயற்குழுத் தேர்தலில் போட்டியிட விரும்பாத தற்போதைய செயற்குழுவின் / பொதுச்சபையின் உறுப்பினர் ஒருவரை அவரது எழுத்து மூலமான வெளிப்படுத்துதலுடனும் இசைவுடனும் தேர்தல் அதிகாரியாக நியமிக்கலாம். அவர் தனக்குத் தேவையான உதவியாளர்களை செயற்குழுவின் அனுமதியுடன் நியமிக்கலாம். அவர்கள் சங்க உறுப்பினர்கள் அல்லாதவர்களாக அல்லது தேர்தலில் போட்டியிட விரும்பாத சங்க உறுப்பினர்களாக இருக்க வேண்டும்.

தேர்தல் அதிகாரியாக தெரிவுசெய்யப்பட்டவர் மார்கழி 15ஐ வேட்புமனுத்தாக்கல் செய்வதற்கான இறுதிநாளாகக் குறிப்பிட்டு மார்கழி 05க்கு முன்னதாக வேட்பு மனுக்களைக் கோரும் அறிவித்தலை விடுக்க வேண்டும்.

வேட்பு மனுக்கள் ஏழு பதவிவழி உறுப்பினர் பதவிகளுக்கும், நான்கு செயற்குழு உறுப்பினர் பதவிகளுக்குமாக மொத்தம் பதினொரு பதவிகளுக்கு மட்டுமே கோரப்படும்.

ஏனைய நான்கு உறுப்பினர்களின் தெரிவு கீழ்க்கண்டவாறாக அமையும். பதவி விலகிச் செல்லும் செயற்குழுவானது தனது இறுதி அமர்வின்போது புதிய செயற்குழுவுக்கு இரு உருப்பினர்களை நியமிக்கும். ஏனைய உறுப்பினர்களும் புதிய செயற்குழுவுக்குத் தெரிவு செய்யப்பட்டு பதினொரு உறுப்பினர்களினால் அவர்களினது முதலாவது அமர்விலே தெரிவுசெய்யப்படுவர். இதிலே போட்டியிருக்குமாயின் பெரும்பான்மை மூலம் முடிவு தீர்மானிக்கப்படும். தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகிய பதவி நிலைகளுக்குமான வேட்பாளர்கள் பின்வரும் தகுதியினைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும்.

அ. சங்க அங்குரார்ப்பண ஏற்பாடுகளுக் குழு உறுப்பினர்களில் ஒருவராக இருக்க வேண்டும். **அல்லது,**

ஆ. கடந்த காலச் செயற்குழுக்களில் ஏதாவது ஒன்றிலாவது ஏழு பதவிவழி உறுப்பினர் பதவிநிலைகளில் ஏதாவது ஒன்றினையாவது அதனது முழுமையான பதவிக்காலத்திற்கு வகித்த ஒருவராக இருக்க வேண்டும். **அல்லது,**

இ. தொடர்ந்து முழுமையான இரண்டு பதவிக்காலத்திற்கு செயற்குழு உறுப்பினராக இருந்தவராக இருக்க வேண்டும். **அல்லது,**

ஈ. தொடர்ந்து ஐந்து வருடகால உறுப்புரிமையைப் பேணி வந்த உறுப்பினராக இருக்க வேண்டும். **அல்லது,**

உ. பதவி விலகும் செயற்குழு உறுப்பினர்களில் மூவரால் முன்மொழிந்து வழிமொழியப்பட்ட உறுப்பினராக இருக்கவேண்டும். **அல்லது,**

ஊ. ஐந்து ஆயுள் கால உறுப்பினர்களால் முன்மொழிந்து வழிமொழியப்பட்ட உறுப்பினராக இருக்க வேண்டும்.

வேட்பு மனுக்களில் வேட்பாளரின் தகுதி தெளிவான முறையிலே உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்தப்படாத மனுக்களும், இத்தகைய தகுதிகளில் ஒன்றினையாவது கொண்டிராத வேட்பாளர்களினது வேட்பு மனுக்களும் நிராகரிக்கப்படும். செயற்குழுவின் ஏனைய உறுப்பினர்களின் தெரிவினைப் பொறுத்தவரையில் அவர்களினது வேட்புமனுக்கள், சங்கத்தின் ஆயுள்கால உறுப்பினர்களில் ஒருவரால் முன்மொழியப்பட்டு யாராவது இரண்டு உறுப்பினர்களினால் வழிமொழியப்பட்டிருக்க வேண்டும்.

வேட்பு மனுக்களில் வேட்பாளர், முன்மொழிபவர், வழிமொழிபவர் ஆகியோரது பெயர்கள், உறுப்புரிமை எண்கள், ஒப்பங்கள் ஆகியன தெளிவாக இடம்பெற்றிருக்க வேண்டும். வேட்பு மனுக்கள் மார்கழி 20க்கு முன்னதாக பரிசீலனை செய்யப்பட்டு வெட்பாளர்கள் பட்டியல் இறுதியாக்கப்படும். 14 நாட்களுக்குக் குறையாத முன்னறிவித்தலுடன் வழங்கப்படும் பொதுக்கூட்ட அறிவித்தலுடன் வேட்பாளர்களின் பட்டியலும் சங்க உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

இது தொடர்பில் ஏதாவது அட்சேபனைகள் இருந்தால் அவற்றினை பொதுக் கூட்ட அறிவித்தல் வெளியான தினத்திலிருந்து ஏழு நாட்களுக்குள் எழுத்து மூலமாக தேர்தல் அதிகாரிக்கு அளிக்க முடியும். தேர்தல் அதிகாரி அவற்றினைப் பரிசிலனை செய்து ஆட்சேபனைகள் நியாயமானதாக இருந்தால் மூன்று நாட்கள் முன்னறிவித்தலுடன் பொதுக்கூட்டத்தை ஒத்திவைக்க பொருத்தமான நடவடிக்கையினை மேற்கொள்வார். அவசியமானால் அத்தகைய பதவிகளுக்கு மட்டும் மீண்டும் வேட்புமனுக் கோரப்படும். ஆட்சேபனை தெரிவிக்கப்படாத ஏனைய பதவிகளுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆயினும் அனைத்துப் பதவிகளுக்குமான தேர்தல் வாக்களிப்பு ஒரே தினத்திலேயே நடைபெற வேண்டும். வாக்களிப்பினை நீதியாகவும், நியாயமானதாகவும், பாராபட்சமின்றியும் சரியாகவும் சுமுகமாகவும் நடாத்தி முடிப்பது தேர்தல் அதிகாரியினது தனிப்பொறுப்பாகும். வாக்களிப்பு

நேரம் தொடர்பில் தேர்தல் அதிகாரியே முடிவு செய்து வேட்பாளர் பட்டியலுடனேயே அதனை உறுப்பினர்களுக்கு அனுப்பிவைப்பார். வாக்கு எண்ணிக்கை முடிந்த பின்பு தேர்தல் அதிகாரி முடிவுகளை வெளியிடுவார். தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து நிகழ்ச்சி நிரலுக்கமையப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

## 14. அலுவர்களின் கடமைகள்

**அ. தலைவர்**

சங்கத்தின் செயற்பாடுகள் அனைத்திற்கும், பொறுப்பாக இருந்து வழிநடாத்துதல். செயற்குழுவின் தீர்மானங்களை செயற்குழு உறுப்பினர்களின் உதவியுடன் செயற்படுத்துதல். செயற்குழுவைக் கலந்தாலோசிக்க முடியாத சூழ்நிலைகளில் பொதுச் செயலாளருடனும் அவர் இல்லாவிடத்து துணைப்பொதுச் செயலாளருடனும் கலந்தாலோசித்து முடிவுகளை மேற்கொள்ளலாம். ஆயினும் அடுத்துவரும் செயற்குழுக் கூட்டத்தில் இதுபற்றி விளக்கி, குழுவின் அங்கீகாரத்தினைப் பெறவேண்டும்.

**ஆ. சிரேஸ்ட துணைத்தலைவர்**

தலைவருக்கு உதவியாக செயற்படுதல், தலைவர் கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியாத சந்தர்ப்பங்களில் அவரது பணிகளை நிறைவேற்றுதல்

**ஆ (i) துணைத்தலைவர்**

தலைவருக்கும் சிரேஸ்ர துணைத் தலைவருக்கும் உதவியாகச் செயற்படுதல். சிரேஸ்ர துணைத் தலைவரும் சமூகமளிக்காதவிடத்து கூட்டங்களுக்குத் தலைமை தாங்குதல். அவர்களது பணிகளை மேற்கொள்ளுதல்.

**இ. பொதுச்செயலாளர்**

சங்கத்தின் சகல நடவடிக்கைகளையும் செயற்படுத்துதல் கூட்டங்களைக் கூட்டுதல், சகல அறிக்கைகளையும் தயாரித்தல், பேரவையின் சகல கடிதத் தொடர்புகளுக்கும் பொறுப்பாக இருத்தல். பேரவையின் சகல ஆவணங்களையும் பாதுகாத்தல் உறுப்பினர் பட்டியலை எப்பொழுதும் முழுமையாக வைத்திருத்தல்.

**ஈ. துணைப்பொதுச் செயலாளர்**

பொதுச்செயலாளருக்கு உதவியாகச் செயற்படுதல். பொதுச்செயலாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் அவரின் கடமைகளை நிறைவேற்றுதல்.

**உ. நிர்வாகச் செயலாளர்**

சங்கத்தின் நிர்வாகச் செயற்பாடுகளில் பொதுச்செயலாளருக்கு உதவியாகச் செயற்படுதல். உறுப்பினர்களைச் சேர்த்தல், பட்டியலை முழுமையாகப் பேணுவதில் பொதுச் செயலாளருக்கு உதவுதல்.

**ஊ. நிதிச்செயலாளர்**

சங்கத்தின் சகல நிதி நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருத்தல். செயற்குழுவின் தீர்மானங்களுக்கு அமைய சங்கம் சார்ந்த வங்கி நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல். வரவு செலவுப் பதிவேடுகளை எப்பொழுதும் முழுமையாக

வைத்திருத்தல். கணக்கறிக்கையைக் கணக்காய்வாளர்களின் பரிசீலனைக்கு விட்டு அவர்களால் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கையை வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பித்தல். உரிய காலத்தில் உறுப்புரிமைப் பணம் செலுத்தும் / செலுத்தாத உறுப்பினர்களின் விபரங்களைப் பொதுச் செயலாளர் ஊடாக செயற்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவருதல். சங்க நிதியில் ரூபா 2000/= (இரண்டாயிரத்திற்கு) உட்பட்ட தொகையைக் கையிருப்பாக வைத்திருத்தல்.

**எ. ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்.**

தமது சாதாரண கடமைகளுடன் செயற்குழுவின் தீர்மானத்திற்கு ஏற்ப சங்கத்தின் பல்வேறு துறைசார்ந்த துணைக் குழுக்களுக்கு பொறுப்பாக இருத்தல்.

செயற்குழுக் கூட்டங்களில் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பித்தல்.

## 15. கணக்காய்வாளர்கள்

சங்கத்தின் உறுப்பினர் அல்லாத துறைசார்ந்த இருவர் பொதுச்சபைக் கூட்டத்தின்போது பொதுச்சபையால் தெரிவுசெய்யப்படுவர்.

## 16. செயற்குழுக்கூட்டங்கள்

I. தலைவரின் கோரிக்கையின்பேரிலும், நிறைவெண்ணுக்குக் குறையாத செயற்குழு உறுப்பினர்களின் எழுத்து மூலமான வேண்டுகோளின்பேரிலும் செயலாளரினால் செயற்குழுக்கூட்டம் கூட்டப்படும்.

II. செயற்குழுக் கூட்டங்களுக்குக் குறைந்தது இரண்டு நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்கப்படல் வேண்டும்.

III. அவசர சந்தர்ப்பங்களில் தலைவரின் அனுமதியுடன் அல்லது 2/3ற்குக் குறையாத செயற்குழு உறுப்பினர்களின் எழுத்து மூலமான வேண்டுகோளின்பேரில் ‘அவரசக்கூட்டம்’ ஒன்றினை இரண்டு மணிநேர முன்னறிவித்தலுடன் கூட்டலாம்.

IV. என்ன நோக்கத்திற்காக இந்த அவரசக்கூட்டம் கூட்டப்பட்டதோ அந்த விடயம்பற்றி மட்டுமே இச்செயற்குழுவில் ஆராயப்படவேண்டும்.

V. எழுத்து மூலமான அறிவித்தல் இன்றி தொடர்ந்து மூன்று செயற்குழுக்கூட்டங்களுக்கு சமூகமளிக்கத்தவறும் செயற்குழு உறுப்பினர் தாமாகவே பதவி விலகியவராகக் கருதப்பட்டு இதுபற்றி அவருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும். ஆயினும் அவசர செயற்குழுக்கூட்டங்கள் இதற்கு விதிவிலக்கானவை.

VI. ஒவ்வொரு செயற்குழுவிலும் முன்னைய கூட்ட அறிக்கை பொதுச் செயலாளரினால் வாசிக்கப்பட்டு செயற்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

VII. மூன்று கூட்டங்கள் தொடர்ச்சியாக கோரமின்றிக் கூட்டப்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டால், தலைவர் பொதுச்செயலாளருடன் ஆலோசனை செய்து, அச்செயற்குழுவைக் கலைத்து, புதிய செயற்குழுவைத் தெரிவுசெய்வதற்கான பொதுக்கூட்டத்தைக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

VIII. ஆயினும் புதிய செயற்குழு பொறுப்பேற்கும் வரை பழைய செயற்குழுவே பதவியில் இருப்பதாகக் கருதப்படும்.

IX. செயற்குழுக் கூட்டங்களுக்கான நிறைவெண் 9 (ஒன்பது) அல்லது அப்போதுள்ள செயற்குழு உறுப்பினர் தொகையின் அரைப்பங்கிற்கு அடுத்துவரும் ஒற்றை எண். இதில் எது குறைவோ அதுவே நிறைவெண்ணாகும்.

X. செயற்குழு உறுப்பினர் அல்லாதவரும் ஆலோசனைகளை - பிரச்சினைகளை எழுத்து மூலம் பொதுச் செயலாளர் ஊடாக செயற்குழுவுக்கு சமர்ப்பிக்கலாம். பொதுக்குழுவில் அவ்விடயம் ஆராயப்படும்போது அவசியமானால் குறிப்பிட்ட உறுப்பினரை அழைத்து, நேரடியாக அவரது கருத்தினை செயற்குழுவுக்கு விளக்கும் வாய்ப்பினை வழங்கத் தலைவருக்கு அதிகாரம் உண்டு. ஆயினும் வாக்கெடுப்பிலோ குறிப்பிட்ட விடயம் அல்லாத வேறு விடயங்கள் ஆராயப்படும்போதோ செயற்குழு உறுப்பினர் மட்டுமே கலந்துகொள்ள முடியும்.

## 17. வங்கிக்கணக்கு :

சங்கப்பொதுச்சபை ஏற்றுக்கொள்ளும் வங்கியியில் அல்லது வங்கிகளில் சங்கக் கணக்குகளைப் பேண முடியும். சகல வங்கி நடவடிக்கைகளையும் நிதிச்செயலாளருடன் தலைவர் அல்லது பொதுச்செயலாளர் ஒப்பமிட்டு செயற்படுத்த முடியும்.

I. கொடுப்பனவுகள் : ஆயிரம் ரூபாய்க்கு மேற்பட்ட கொடுப்பனவுகள் அனைத்தும் காசோலை மூலமே இடம்பெறவேண்டும்.

## 18. நிதியீட்டல் முறைகள்

அ. அங்கத்தவர் சந்தா
ஆ. நன்கொடைகள்
இ. அரச நிறுவன உதவிகள்
ஈ. அரச சார்பற்ற நிறுவன உதவிகள்
உ. வெளிநாட்டிலுள்ள நலன் விரும்பிகளின் உதவிகள்.
போன்றவை மூலம் நிதியைச் சேகரித்தல்

## 19. பொதுச் சபைக் கூட்டம்.

I. சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் செயற்குழுவின் தீர்மானத்திற்கமைய தை – மாசி மாதங்களுக்கிடையில் கூட்டப்பட வேண்டும். பொதுச்சபைக் கூட்டத்திற்கு இரண்டு வாரகால முன்னறிவித்தல் கொடுக்கப்பட வேண்டும்.

II. பொதுச்சபையில் பிரேரணைகள், கேள்விகள், விளக்கங்கள், அமைப்புவிதித் திருத்தங்கள் போன்றவற்றினை சமர்ப்பிக்க விரும்பும் உறுப்பினர்கள் அவற்றினை தை முதலாம் திகதிக்கு முன்னதாக பொதுச் செயலாளரிடம் எழுத்து மூலமாக சமர்ப்பிக்க வேண்டும்.

III. இவ்வாறு பெறப்படும் கோரிக்கைக்கு ஏற்ப பொதுக்கூட்ட நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு பொதுக்கூட்டத்திற்கான அழைப்பு உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

IV. வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பொதுச்செயலாளரினால் பேரவையின் வருடாந்த அறிக்கையும் நிதிச்செயலாளரினால் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு பொதுச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

V. மொத்த உறுப்பினரில் 2/3 பங்கு அல்லது 30 பேரில் எது குறைவோ அதுவே பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண்ணாகும்.

## 20. பதவிக் காலம்

சங்கச் செயற்குழுவின் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகளாகும்

## 21. சிறப்புப் பொதுக்கூட்டங்கள்

தலைவரின் கோரிக்கையின் பேரிலோ செயற்குழுவின் தீர்மானத்திற்கு அமையவோ அல்லது 50% ற்குக் குறையாத பொதுச்சபை உறுப்பினர்களின் எழுத்து மூலமான கோரிக்கையின்பேரிலோ அது கிடைத்த 10 நாட்களுக்குள் சிறப்புப் பொதுக்கூட்டம் கூட்டப்படலாம். எந்த நோக்கத்திற்காக இக்கூட்டம் கூட்டப்பட்டதோ அந்த விடயம் மட்டுமே இக்கூட்டத்தில் ஆராயப்படலாம். இக்கூட்டத்திற்குக் குறைந்தது மூன்று நாட்கள் முன்னறிவித்தல் வழங்கப்பட வேண்டும். கூட்ட நிறைவெண்ணே இதற்கான நிறைவெண்ணாகும்.

## 22. பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கு முன்னதாகச் செயற்குழுவில் ஏற்படும் வெற்றிடங்கள் செயற்குழுவினாலேயே நிறைவுசெய்யப்படும்.

## 23. பதிவேடுகள் பரிசீலனை

ஏழு (7) நாட்கள் முன்னறிவித்தலுடன் பொதுச்செயலாளருக்கு விடுக்கப்படும் எழுத்து மூலமான வேண்டுகோளின்பேரில் பொதுச்சபை உறுப்பினர்கள், உறுப்பினர் பட்டியல், களஞ்சியப் பதிவேடுகள் போன்றவற்றினைப் பார்வையிட வசதி செய்யப்படல் வேண்டும்.

## 24. நம்பிக்கையில்லாப் பிரேரணை

செயற்குழுவிலோ அல்லது செயற்குழு உறுப்பினர்களிலோ நம்பிக்கை இழந்த நிலையில் மொத்த உறுப்பினர்களில் அரைவாசிக்குக் குறையாத உறுப்பினர்களின் எழுத்து மூலமான ஒப்புதலுடன் நம்பிக்கையில்லாப் பிரேரணை / பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட முடியும். பிரேரணை கிடைத்து இரு வாரங்களுக்குள் கூட்டப்படும் சிறப்புப் பொதுக்கூட்டத்தில் அது விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்பின் மூலம் பிரேரணையின் முடிவு தீர்மானிக்கப்படும். சமூகமளித்த உறுப்பினர்களில் 2/3 ற்குக் குறையாத வாக்குகளைப் பெறுவதன் மூலம் பிரேரணை வெற்றிபெற முடியும். நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவினால் ஏற்படும் வெற்றிடம் / வெற்றிடங்கள் அதே கூட்டத்திலேயே நிறைவுசெய்யப்படும்.

## 25. அமைப்புவிதித் திருத்தங்கள், நீக்கங்கள், சேர்க்கைகள்

மொத்த உறுப்பினரில் 2/3ற்குக் குறையாதோர் கலந்துகொள்ளும் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டோரில் 2/3ற்குக் குறையாத உறுப்பினர்களின்

ஒப்புதலுடனேயே இவ்விதிகளைத் திருத்தவோ நீக்கவோ, சேர்க்கவோ, மாற்றவோ முடியும்.

26. விதிகளுக்குப் பொருள்கோடல்

இவ்விதிகளுக்குப் பொருள்கோடல் செய்வதில் பொதுச்சபையின் முடிவே இறுதியானது.

ஆக்கம் :

வே. போ. மாணிக்கவாசகர்
சங்க உறுப்பினர்